புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 December 2023 ISSN: 2456-821X

# *கருவாச்சி – பண்பாட்டின் அடையாளம்*

*அ.ரூபாதேவி M.A., M.A., M.A., M.Phil.,*
*உதவிப் பேராசிரியர்*
*தமிழியல் துறை*
*ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி),*
*சிவகாசி.*

*சமூகமாக வாழ்ந்த மனிதன் தனக்கான பரிவர்த்தனைக்காக மொழியை உருவாக்கினான். மொழி அவனது தேவையாக இருந்த போது ஒலி வடிவம் பெற்று பின் வரிவடிவமாகவும் அவரவர் வாழ்ந்த சூழலில் வளர்ந்து வரலாயிற்று.*

*மனிதன் அவன் வாழ்ந்த சூழலை, பண்பாட்டை அறிய மொழியினால் உண்டான வரலாறுகள் உதவுகின்றன. தலைமுறைதோறும் கடைப்பிடிக்கப்படும் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் சடங்காக மாறுகிறது. அதுவே பண்பாட்டை உருவாக்கம் செய்கிறது.*

*“பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுத் தொகுதியாகும்.”1 என மானிடவியலறிஞர் எட்வர் பர்னட் டைலர் வரையறை கூறுகின்றார்.(பக்.152) பண்பாட்டுக் கூறுகளாக மக்களுடைய பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் போன்றவைகளைக் கூறலாம். பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வுகளாகவும் நடையுணர்வுகளாகவும் தோன்றும். “பண்புடையார் பட்டுண்டுலகு”(திருக்குறள்.996) என்றார் வள்ளுவர். “பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்”(8-133- நெய்தல்கலி) எனக் கலித்தொகை கூறும் நல்ல குணங்களின் வெளிப்பாடு எனவும் கூறலாம்.*

*அகழ்வாராச்சியில் படிமங்கள், தொல்லுயிர் எச்சங்கள் கடந்து போன யுகத்தின் வரலாற்றைச் சுமந்து நிற்கின்றன. படிமங்களைக் கொண்டு ஓரளவிற்கு உயிரின வளர்ச்சி பற்றி அனுமானிக்க முடியும் என்ற போதிலும் மொழியின் வரலாறுகள் கடந்த காலம் பற்றிய சித்திரங்களை நமக்குத் தருகின்றன. வையை நதிகரையின் படிமங்களும் சேர்மானங்களுமான உறைந்து போன வரலாற்றைத் தோண்டியெடுத்து நம் கண்முன் நிறுத்தும் ஓர் படிமமென “கருவாச்சி காவியம்” எனும் படைப்பை மரப்பிசினுள் சிக்கிய உயிரிகளை நிமிளைப் படிமமாகக் கொள்ள முடியும். நிமிளை படிமம் மாத்திரமே சிதைவுக்குள்ளாகாமல் முழுமையாகக் கிடைக்கக் கூடிய தொல்லுயிர் எச்சமாகும்.*

*ஆசிரியர் தான் வாழும் பூமியின் கடந்து போன வரலாற்றை மொழியின் வடிவமாக்கி அவர்தம் மொழியிலேயே காவியமென படைத்தளித்துள்ளார். கருவாச்சி காவியத்தின் முக்கியக்கதை மாந்தரான கருவாச்சி எங்ஙனம் தலைமுறை தாண்டியும், தன்னைப் படிமமாக, பண்பாட்டுச் சித்தரமாக வெளிப்படுத்துகிறாள் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*கருவாச்சி காவியத்தில் தலைமைப் பாத்திரமாக கருவாச்சி படைக்கப்பட்டு காவியத்தின் உயிர்த்துடிப்பாக விளங்குகிறாள். கருவாச்சியைச் சுற்றியே இக்காவிய நிகழ்வுகள் அனைத்தும் நடைபெறுகின்றன. கிராமத்து இளம் பெண்ணான கருவாச்சி பகை உணர்ச்சிக் காரணமாகப் பலியாடாக்கப்படுகின்றாள். தன் முரட்டுக் கணவன் செய்த கொடுமைகளை வெளியே சொல்லக் கூடத் தெரியாத இளம் பருவத்தினள். அடிமேல் அடியாக விழும் துன்பங்களை எதிர்த்துப்*

போராடுபவளாகச் சித்தரிக்கப்படுகிறாள். கருவாச்சியைச் சுற்றிக் காவியம் படைக்கப்பட்டிருந்தாலும் கிராமத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் பல குடும்பத்தினரின் பிரச்சனைகளையும் வைரமுத்து குறிப்பிட்டுள்ளார். கருவாச்சி என்ற ஒருத்தியின் தனி வாழ்க்கை மட்டுமன்று; இந்தக் காவியம் காடை பிடிக்கப் போகிற வேடன் அடர்ந்த காட்டுக்குள் சகல ஜீவராசிகளின் சப்தங்களையும் கேட்பது போல இந்தப் படைப்பில் அனைத்துத் தரப்பு மனிதர்களின் குரல்களும் மாறிமாறி ஒலிப்பதை இக்காவியத்தில் பார்க்க முடிகிறது.

கருவாச்சி என்கிற அபலைப்பெண் ஆசிரியரின் கூற்றுப்படியே, புரட்சி பேசும் பாத்திரமல்ல. கதைப் போக்கின் நம்பிக்கை தளராது வாழும் எத்தனங்களை சமூகத்தின் முரணோடும், உறவோடும் கட்டமைத்துக் கொண்டவளாவாள். கரிசல் பூமியின் வெக்கையும், கருவேலங்காடும், ஆடும் மாடும் தோட்டமென விரிகிறது கதைக்களம். பற்பல கதை மாந்தர்கள் பின்னலாகவும், உட்செருகியும் வந்து போகின்றனர்.

கருவாச்சியின் திரேகம் பற்றிய குறிப்புகள் விரிகிறது. "நவ்வாப் பழக்கறுப்பு. லவுக்கை போடாதவள். காது வளர்ந்தவள்."(ப.19) என்ற அம்சமான பெண்ணாக அறிமுகப்படுத்தப்படும் கருவாச்சி அலைக்கழிக்கப்பட்ட நிகழ்விலிருந்து கண்ணீருடன் கதையில் தொடர்கிறாள். பெரிய மனுசியாகி நாலு வருடமானாலும் கூறுபாடு சூதுவாது இல்லாத அப்புராணி. மரம், மட்டை, அணில், குயில் இவற்றோடு பேசுகிறவள். வெள்ளந்தியான பெண்ணாக அரட்டாவளைய புடிச்சு மீனெனக் கொண்டு வந்து குழம்பு வைத்துத் தரச் சொல்லுகிறாள். மழை நாளில் ஒழுகும் இடத்தில் சருவச்சட்டிய வச்சு மழையோடு பேசுகிறாள்.

இந்நிலையில் கருவாச்சி பேய் பிடித்து(ப.28) குணம் மாறிப் போனாள். செத்துப் போன சொர்ணக்கிளியின் ஆட்டம் போடுகிறாள். கோடாங்கியின் சத்தங்களுக்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்கிறாள். அடிமனதில் உறைந்திருந்த விசயங்கள் வெளிப்பட்டு இயல்பான நிலைக்கு வருகிறாள். இயல்பான நிலைக்கு வர அவளது முடி அறுக்கப்பட்டு புளியமரத்தில் அறையப்படுகிறது. சம்பிரதாயப்படி ஏழு எருக்கல், சாணிசட்டி, பீத்தமொறம், பீத்த செருப்பு, பீத்த வெளக்கமாறு கருவாச்சி தலையை மூணு சுத்து சுத்தி எறிந்து அவகுறுக்கே ஒலக்கைய போடுகிறார்கள்.(பக்.43).

பேயாட்டம் ஆடினதில் அவளுடம்பு நோவு கண்டு விடுகிறது. இடிச்சமாவ அவித்து வேது கொடுக்கிறாள். பஞ்சாயத்துக்கு முதல் நாளிரவு கருவாச்சி காடா விளக்குடன் பேசுகிறாள். பஞ்சாயத்தில தாலியைத் தர மறுக்கிறாள். இங்குத் தொடங்குகிறது அவளது நம்பிக்கையும், துணிவும் சூழலை எதிர்க்கும் திறமும். எத்தனை வற்புறுத்தியும் தாலிதர மறுக்கிறாள். தாலி அவளுக்கு வைராக்கியத்தின் குறியீடாக வாழ்வு முழுவதும் வருகிறது.

இக்காவியத்தின் தொடக்கமே பஞ்சாயத்துக் கூட்டத்திலிருந்துதான் நகர்கிறது. புகார் கொடுப்பவர்களும் புகார் சுமத்தப்பட்டவர்களும் பஞ்சாயத்திற்கு அஞ்சேகால் ரூவா முறிவைக்க வேண்டும் என்ற வழக்கம் இருந்ததை ஆசிரியர் இக்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். கட்டையா அஞ்சேகால் ரூவா முறிவச்சுட்டு எதாருந்தாலும் பேசப்பா. ஆத்தா பெரிய மூக்கி, சடையத் தேவன் சம்பந்தக்காரி... இப்படி வாம்மா. அஞ்சேகால் ரூவா முறியக் கட்டி ஓங்கதைய நீ ஒப்பி. ஓம் பங்குக்கு என்று பஞ்சாயத்து முறையினைக் கூறுகிறார் ஆசிரியர். வாதி பிரதிநிதி இருவருக்கும் சமமாகத் தன் கருத்துக்களை எடுத்துக் கூற உரிமை வழங்கப்படுகின்றன என்பதை இக்காவியத்தின் மூலம் அறிய முடிகிறது.

பச்சை நெல்ல குத்திக் கஞ்சி காய்ச்சி உழுகிறவர்களுக்கு எடுத்துச் செல்கிறாள்.(ப.65). உழவு நடத்தவிடாமல் தடுத்த போதும் தானே உழவுமாடாகிறாள். வைராக்கியத்திற்கான சுவடுகளில் பயணப்படுகிறாள். கொட்டத்தில் சாணி அள்ளும் போது தாய் சிரிப்பதைப் பார்க்கிறாள். களைக்கொத்துடன் காலில் செம்மண் சேறுடன் வீட்டுக்கு வரும் மகளை வியப்போடு தாய் பார்க்கிறாள். களையெடுக்க யாரும் வராதபோது இரவோடிவராக வெளியூர்க்காரர்களை வைத்துக் களையெடுத்த கருவாச்சி உரமுள்ளவளாகிறாள். சூழல் அவளை உரமுள்ளவளாக உருவாக்குகிறது.(ப.70)

ஒட்டு ஒறவில்லாத கட்டயனின் கருவைக் கலைக்கத் தாய் திட்டம் போடக் கருவாச்சி அறியாமல் வைத்தியச்சி மூலம் கருக்கலைய மருந்து தருகிறாள் தாய். பப்பாளி பழம் கூழாக்கிச் சீனிபோட்டுக் கொடுக்கிறாள். கச்சேந்திர எலை கசக்கிக் கருப்பட்டியுடன் சேர்த்துத் தருகிறாள். வெள்ளெருக்கம் பால் துணியை ஜீவதுவாரத்தில் வைக்கக் கருவாச்சிய கேட்க அவள் மறுத்துக்

*கரு சுமந்தாள். அம்மை வந்தபோது ஆத்தா தவித்த தவிப்பும் செய்த செயலையும் எண்ணி மருகுகிறாள். அம்மை போட்டாலும் தலைமாட்டில் எளினி, வேப்பங்கொழுந்து, மஞ்சள் அருகம்புல்லு, ஆமணக்கு வித்து சேர்த்து "அம்மன் காப்பு" அரச்சுக் கொடுக்கிறாள்(ப.104). பாரடிச்சு அழப்போகும் கருவாச்சி தாகத்திற்கு பொட்டல் வெளியில் கத்தாளம்பழம் சாப்பிடுகிறாள். விடுகதையுடன் அவர்கள் எழவு வீடு செல்கிறார்கள்.*

*ஆத்தாவின் சாவினால் துயரப்படுகிறாள். ஆயினும் கண்ணீர் சொரிய அழவில்லை. கொள்ளிக்குடம் உடைக்க ஊர் மந்தை வரைக்கும் வந்தவள் அவள். சுடுகாட்டிற்கு, வெருண்டோடி வருகிறாள். கட்டயனின் காரியம் கெடுக்க எங்குமில்லாத வழக்கமாய் ஆத்தாவின் சிதைக்குப் புறங்கையே செரைத்துக் கொண்டு கொள்ளி வைக்கிறாள்.*

*கருவாச்சி புள்ளத்தாச்சி பொம்பள ஆனாலும் களகன்னி. கொழையறுக்காவென வேலைக்குப் போகிறாள். ஆம்பள பிள்ளையா பொம்பள பிள்ளையானு கேட்கிற ஆவலும் எடதுகை ஊண்டி எந்திரிச்சா பொம்பளப்பிள்ளையும், வலதுகை ஊண்டி எந்திரிச்சா ஆம்பளபிள்ளைமென சொல்லும் அவளுக்கு ஆவலை அதிகப்படுத்துகிறது. வங்காட்டில குடிசையில் தனியாளாய் மாட்டிக் கொள்ளும் போது பிரசவ வேதனை வருகிறது. பிள்ளைய பார்த்தவுடனே தொப்புள் கொடியறுக்கப் பன்னருவாளைப் பயன்படுத்துகிறாள். பிள்ளையெடுத்து வந்தவ மேலெல்லாம் மஞ்சப்பூசி நிர்வாணமாக உட்கார வைத்து வெந்நி அடிக்கிறாள் ராசம்மா. பச்ச ஒடம்பு பிசுக்குப் போக சுளீர்சுளீரென அடிக்கிறாள்.*

*பிள்ளையெடுத்தவளுக்குப் பேறுகாலச் செலவு கொடுக்கிறார்கள். மஞ்சள், கடுகு, சுக்கு, மெளகு, திப்பிலி, தேசாவதாரம், ஓமம், சதகுப்ப, சித்தரத்த, வசம்பு, பெருங்காயம், வாய்மெளகு இதையெல்லாம் வறுத்துத் துணியில் சலிச்சு, வெள்ளப்பூடு போட்டுக் கருப்பட்டிபோட்டு பஞ்சாமிர்தபதத்திற்குக் கிண்டி தருகிறார்கள்.*

*பிள்ள பெற்ற நாளில் நேர்ந்துகிட்ட காளியாத்தாவுக்குக் கெடாவெட்ட கொன்னவாயன் கொண்டு வந்த கெடாவை ஆத்தாவா கொடுத்தது அதற்குப் புலித்தேவன்னு பேருவச்சா பையனுக்கு அழகுசிங்கம்னுபேரு வச்சா ரெண்டையும் ரெண்டு புள்ள மாதிரி வளர்த்து வந்தாள். நேர்ந்து விட்ட கெடாவ காயடிச்சு விடவும் காளியாத்தாமேல் கோபம் கொண்டு அழுகிறாள் கருவாச்சி.(பக்.186) புலித்தேவன் தோலு மட்டும் கிடைக்க நெஞ்சு பதறி அழுகிறாள். காளி கோயில் முன்னாலேயே குழி தோண்டித் தோல காணிக்கைனு செலுத்துறா. புதைத்த குழிமேல் அழுது விழுந்துகிடந்தாள்.(ப.196)*

*படைப்பைக் களமாகக் கொண்டு ஆய்வு செய்தோமானால் அதனுள் உறைந்திருக்கக் கூடிய அச்சமூகத்தின் பழக்க வழக்கங்கள், செயல்பாடுகள், மருத்துவ முறைகள், உணவு முறைகள், உணவு உற்பத்தி சார்ந்த நடைமுறைகள் தெரியவரும். இப்படைப்பில் மேற்கண்ட தரவுகள் பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. பண்பாட்டுக் கூறு என்பது அணிமணிகள், இல்லாப் பொருள்கள், இயந்திரங்கள், தொழிற்சாலைகள் இவை சார்ந்தும் தாவரங்கள், வீட்டு விலங்குகள், பராமரித்தலும், நிலம், நீர் போன்ற இயற்கை மதிப்பீடுகளை அறிந்திருத்தல், அறநெறி, நகைப்பண்பு, நப்பு செய்ந்நன்றி இவையும் ஆகும்.*

*கருவாச்சி என்ற கதாபாத்திரத்தின் ஊடாகப் பண்பாட்டுத் தரவுகள் கருவாச்சி என்கிற கதாபாத்திரம் அப்படைப்பினுள் பண்பாட்டுப் படிமமாகத் திகழ்வதை நாம் உணரமுடிகிறது.*

*துணைநூற் பட்டியல்*


1. *பண்பாட்டு மானிடவியல், பக்தவத்சலபாரதி, மணிவாசகர் பதிப்பகம்.2014*
2. *திருக்குறள், க.ப.அறவாணன் உரை, மாணவர் மறுதோன்றி அச்சகம், சென்னை-1*
3. *கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு. 2007.*
4. *கருவாச்சி காவியம், வைரமுத்து, சூர்யா பதிப்பகம், சென்னை.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********